குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**MC.No.2/2026**

வழக்கு சாட்சி ம.சா.1

2026ம் ஜுன் மாதம் 2 –ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய 1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர்என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழ்செல்வி | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused present).**

நாள்: 02.06.2026

**குறுக்கு விசாரணை**

எதிர்மனுதாரர் எனக்கு 2வது கணவர் என்றால் சரிதான். ஏற்கனவே திருமணம் நடைப்பெற்று விவாகரத்து பெற்ற விவரத்தை மனுவில் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் எதிர்மனுதாரருக்கு தெரியும். முதல் திருமணம் நடைப்பெற்று விவாகரத்து ஆன ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது முதல் திருமணத்தை மறைத்து தான் 2வது திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு இந்த விவரம் முதலிலேயே தெரியும். அவருக்கும் இது இரண்டாவது திருமணம் தான். வீட்டில் சொல்லி தான் திருமணம் செய்து வைத்தார்கள். இந்த விவரத்தை நான் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் திருமணம் நடைப்பெற்று விவாகரத்து ஆன ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நம்பிக்கையின் பேரில் திருமணம் செய்து கொண்டோம். நான் திருமணம் ஆனதை மறைத்து திருமணம் செய்ததால் எதிர்மனுதாரரின் மீதும் அதே காரணத்தை சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது 4 பவுன் தோடு, கழுத்து செயினும் போட்டதாக கூறியுள்ள நிலையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். செயின் 2 பவுன் மோதிரம் ½ பவுன், கால் பவுன் வீதம் 2 குழந்தைகளுக்கும் ½ பவுன் தோடு. என்னுடைய செயின் மற்றும் ஒரு குழந்தையின் தோடும் என்னிடம் உள்ளது. மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் எனக்கு மட்டுமே 4 பவுன் போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல் வீட்டிற்கு தேவையான அனைத்து பொருட்களும் என்னுடைய பெற்றோர்கள் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரரிடம் இருந்து தனியாக பிரிந்து

இருந்த போது வீட்டிற்கு தேவையான பொருட்கள் அனைத்தும் எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் சரியல்ல. நானே தான் வாங்கிக்கொண்டேன். எனது அம்மா எனக்கு கொடுத்த சீர். எதிர்மனுதாரர் என்னை விட்டு சென்றுவிட்டதால் நானே தான் வீட்டை காலி செய்துவிட்டு எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் போகும் போது என்னுடைய அம்மா எனக்கு சீர்வரிசையாக கொடுத்த பொருட்கள் அனைத்தையும் நான் என்னுடன் எடுத்துச்சென்றுவிட்டேன். எனக்கு பிரிந்த இரண்டு குழந்தைகளும் அரசு மருத்துவமனையில் தான் பிறந்தது என்றால் சரிதான். அரசு மருத்துவமனை என்பதால் பிரசவ செலவு பெரிதாக இல்லை என்றால் சரிதான். எத்தனை வருடமாக நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் 4 வருடம் இருக்கும். திருமணம் ஆன நாள் முதல் பிரிந்த காலம் வரை கொஞ்சம் கொஞ்சமாக மொத்தம் 4 வருடம் சேர்ந்து வாழ்ந்தோம். திருமணம் நடைப்பெற்று 10 வருடம் முடிந்த நிலையில் என்ன காரணத்திற்காக எந்த தேதியில் 4 வருடமாக வாழ்ந்து வந்தேன் என்ற விவரத்தை மனுவிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறாக 2018 ம் வருடம் பிரிந்து வாழ்ந்த நிலையில் எதிர்மனுதாரர் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு விவாகரத்து மனு தாக்கல் செய்தததை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்வதில் ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரரை காரணம் இல்லாமல் சத்தமாக திட்டிக்கொண்டிருப்பேன் என்றால் சரியல்ல. எங்கள் இருவரின் குடும்பத்தில் உள்ளவர்களும் பேசி எங்களை சேர்த்துவைத்தார்கள் என்றால் சரியல்ல. நான் தற்போது மட்டும் தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். என் வீட்டில் தான் சமாதானம் பேசி சேர்ந்துவைத்தார்கள். என்னை அடித்து துன்புறுத்தியதாக சொல்லிய நிலையில் அதுசம்மந்தமாக காவல் நிலையில் கொடுத்த புகாரே அல்லது சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் எதிர்மனுதாரர் என்னை அடித்துள்ளார். என்னென்ன தேதிகளில் என்னை அடித்து துன்புறுத்தினார் என்பதை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு ஆண் சம்பாதிக்கும் பணத்தை தன் தாயிடம் கொடுப்பது தவறா என்றால் திருமணத்திற்கு பின்னிட்டு கொடுத்தால் தவறு தான். அதேபோன்று பணம் கொடுத்த சமயத்தில் நான் எதிர்மனுதாரரிடம் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. நான் எப்போதும் எதிர்மனுதாரரிடம் சம்பளம் எவ்வளவு என்று கேட்டது கூட இல்லை. அதேபோல் அவர் எங்கு வேலை செய்கிறார் என்ற விவரத்தை நான் மனுவிலும் பிரமாண

வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அப்ப அவர் எலக்ட்ரீசியன் வேலை செய்து மாதம் ரூ.40,000/- சம்பளம் வாங்குவதாக நான் சொன்னேன் என்றால் சரியல்ல. யூகத்தின் பேரில் சொன்னேன். எனக்கு நேரடியாக அவர் எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். எனது மாமனார் மாமியார் இருவரும் மூத்த குடிமக்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரையும் பாராமரிக்கும் பொருட்டு சட்டப்படியாக எதிர்மனுதாரருக்கு உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எனது கணவரின் ஊதிய ரசீது பிடித்தம் போக அவர் வாங்கும் சம்பளம் ரூ.12,490/- என்றால் சரிதான். அவர் வெளியில் எலக்ட்ரிக் வேலை செய்தும் சம்பாதிக்கிறார். **அந்த Salary Receipt எ.மா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>மீண்டும் குறுக்கு விசாரணைக்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.</u>**